EPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI

Case No. CC.195/2020

**Depositions of PW 8**

| Name | இம்மானுவேல் ராஜ்குமார் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st Day of July 2025

**01-07-2025**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட பொருளாதர குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21-10-2019 ஆம் தேதி சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மூர்த்தி மனைவி சக்திதேவி என்பவர் நிலையம் ஆஜராகி, கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 564/2019 இதச பிரிவுகள் 279, 304(ஏ) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை எனது பார்வைக்கு முன்வைத்தார். நான் வழக்கினை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று, சாட்சிகளை விசாரித்தபோது, சாட்சிகள் உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் என்பவரிடம் அளித்த வாக்குமூலங்களையே என்னிடமும் அளித்ததால் அவைகளை

நான் தனியாக பதிவு செய்யவில்லை.

(2) பின்னர் 23-11-2019 ஆம் தேதியன்று நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி, கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். விபத்தில் தொடர்புடைய TN 65 B 4308 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரையும், TN 67 AC 6202 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினையும் ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து, அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையைப் பெற்றேன். **TN 65 B 4308 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **TN 67 AC 6202 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) பின்னர் விபத்தில் இறந்துபோன மூர்த்தி என்பவரது இறப்பினை உறுதி செய்த மருத்துவர் விஜயகுமார் என்பவரையும், மூர்த்தி என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் நிஷாந்த் என்பவரையும் விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்து, விபத்து பதிவேடு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **மூர்த்தி என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இரண்டாம் நிலை காவலர் காளிராஜ் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரான கருப்பசாமி வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் ஆகியோரை விசாரித்து, அவர்களது

வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்து, எனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(ஏ) இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.–1 முதல் 4 வரையான சாட்சிகள் இறந்துபோன மூர்த்தி என்பவரது உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.–1 புகார் மனுவில் வாகன எண். ஒயிட்னரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.–1 சக்திதேவி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவத்தன்று இரவு 10 –10.30 மணியளவில் புகார் அளித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை இரவு 10 மணிக்கு முன்பாகவே பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.– சக்திதேவி என்பவரிடம் புகார் மனு எதுவும் பெறப்படாமலேயே பிரேத பரிசோதனை செய்வதற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.–1 புகார் மனுவில் வாகன எண். ஒயிட்னரால் எந்த தேதியில் எத்தனை மணிக்கு, யாரால் திருத்தம் செய்யப்பட்டது என்றால் புகார் பெறப்படும்போதே அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(2) அ.சா.–1 சக்திதேவி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் டிராக்டர் மற்றும் டிரைலரின் பதிவு எண் தெரியாததால் மறுநாள் அந்த வாகன எண்ணை திருத்தம் செய்து கொடுத்ததாக சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.–1 சக்திதேவி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், சிவகாசி – நாரணாபுரம் கிழமேல் சாலைக்கு தென்புறம் அமைந்துள்ள ரத்னா பட்டாசு தொழிற்சாலைக்கு செல்லும் மண் ரோட்டிலிருந்து கிழமேல் சாலையில்

ஏறி கிழக்கு பக்கமாக திரும்பும்போது விபதது நடந்தது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.–4 மாதிரி வரைபடத்தில் சிவகாசி – நாரணாபுரம் செல்லும் சாலையில் தென்புறமாக அமைந்துள்ள ரத்னா பட்டாசு தொழிற்சாலையின் நுழைவாயிலின் நேர்எதிரே சம்பவ இடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையின்படி, இறந்துபோன மூர்த்தி என்பவர் தெற்குபக்கம் உள்ள ரத்னா பட்டாசு தொழிற்சாலையிலிருந்து அதன் முன்புறமுள்ள மண்பாதையின் வழியாக கிழமேல் பிரதான சாலைக்கு வந்து உடனடியாக வலதுபுறம் திரும்பும்போது விபத்து நடந்துள்ளது என்றால் திரும்பி சென்று கொண்டிருந்தபோதுதான் விபத்து நடந்துள்ளது.

(3) கிழமேல் சாலையில் தென்புறமுள்ள மண்பாதைக்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூர இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 10 மீட்டர் இருக்கும். மேற்படி மண்பாதை எவ்வளவு அகலம் உள்ளது என்றால் சுமார் 15 அடி இருக்கும். அ.சா.–1 சக்திதேவி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சிவகாசி–நாரணாபுரம் கிழமேல் சாலையில் ரோட்டில் ஏறி கிழக்கு பக்கமாக மூர்த்தி திரும்பிச் செல்லும்போது, அதே சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் பாதசாரிகள் கடப்பதற்கான குறியீடுகள் எதுவும் சாலையில் இடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சாட்சிகள் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கிழமேல் ரோட்டில் செல்லும்போது வலதுபக்கத்தில் தெற்குபுறமாக திரும்பும்போது விபத்து நடந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். விபத்தில் இரண்டு

வாகனங்கள் மோதிக்கொண்டால் இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்படும் என்றால் விபத்தினை பொருத்துதான் கூற இயலும். அ.சா.ஆ.–7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்திற்கு இன்டிகேட்டர், முன் பக்க சக்கரங்கள், முகப்பு விளக்கு, வீல் ரிம், இடது பக்க புட்ரெஸ்ட் ஆகிய இடங்களில் சேதங்கள் காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.–6 டிராக்டரில் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் டிராக்டர் மற்றும் டிரைலருக்கு எந்தவிதமான சேதமும் காணப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(4) எதிரி டிராக்டர் வாகனத்தின் மீது இறந்த நபரின் இருசக்கர வாகனம் மோதவில்லை என்பதால்தான் டிராக்டர் மற்றும் டிரைலரில் சேதம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வாகனத்தின் டயர் மார்க் காணப்பட்டதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள ரத்னா பட்டாசு தொழிற்சாலையின் ஊழியர்கள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்கு வந்த பயணிகள் யாரையேனும் விசாரித்தேனா என்றால் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

(5) நான் சொல்வதுபோல் விபத்திற்கு எதிரி காரணமல்ல என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் குடும்பத்தினருக்கு விபத்து இழப்பீடு கிடைக்க வேண்டுமென்பதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும்

**எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.**